ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 39

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 4	ஏப்ரல் ௴ 1952 நந்தன ௵ சித்திரை ௴	3 இதழ்

எம்பெருமானாருடைய திவ்யஸூக்தி.

ஸ்வாமி, ஸ்ரீ பாஷ்யம் முதலான திவ்ய க்ரந்தங்களில் எம்பெருமானுக்கு விசேஷணங்களை யிட்டருளும்போது * **அநந்தகுணஸாகரம்** * என்றும் *அபரிமிதோதாரகுணஸாகரம்* என்றும் அருளிச் செய்யக் காண்கிறோம். குறிப்பாக ஓரிட மெடுத்துக் காட்டுகிறோம்— இரண்டாமத்யாயத்தின் தொடக்கத்தில் ஸ்ரீபாஷ்யத்தில் ***அபரிமிதோதார குணஸாகரம் பரம் ப்ரஹ்ம** வேதாந்த **வேத்ய மித்யுக்தம்** * என்றுள்ளது. இங்கு பரப்ரஹ்மசப்தம் ப்ரதமாவிபக்தியே யொழிய த்விதீயாவிபக்தியன்று. இதற்கு விசேஷணமான **அபரிமிதோதாரகுண ஸாகரம்** என்பதும் ப்ரதமாந்தமாகவே கொள்ளப்பட வேண்டியதாயிற்று. ஸாகர சப்தம் நித்யபும்லிங்கமாகையாலே **குணஸாகரோ ப்ரஹ்ம** என்று சொல்லத்தகுமே யொழிய **குண ஸாகரம் ப்ரஹ்ம** என்று சொல்லத்தகாது. எம்பெருமான் திருக் கல்யாண குணங்களுக்குக் கடலாகவுள்ளவனென்று இப்படிப்பட்ட பொருளே ஸ்வரஸமாகத் தோன்றுமாதலால் "**குணானாம் ஸாகர:**" என்று தத்புருஷ ஸமாஸம் விவக்ஷிதமாவதற்கே ஔசித்யமுள்ளது. இப்படி ஸமாஸம் கொண்டால் **குணஸாகரம் ப்ரஹ்ம** என்கிற இந்த ப்ரயோகம் உபபத்தி யடைவதற்கு வழியே கிடையாது. தத்புருஷ ஸமாஸத்தை விட்டு பஹுவ்ரீஹி ஸமாஸம் கொண்டால் (அதாவது) "**அநந்த: குணஸாகரா: யஸ்ய தத்**" என்றும் "**அபரிமித: உதாரகுண ஸாகரா: யஸ்ய தத்**" என்றும் ஸமாஸம் கொண்டால் ....**ஸாகரம்** என்று நபும்ஸகலிங்கமாகப் பொருந்தும். ச்ருதப்ரகாசிகாசார்யர் இப்படி பஹுவ்ரீஹி ஸமாஸத்தையே ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கின்றார். எம்பெருமான் குணங்களுக்குக் கடல் போன்றிருப்பவன் என்று எங்கும் எல்லாரும் சொல்லிவருவதும் அனேக க்ரந்தங்களிலுள்ளதுமான இந்த ரீதியைவிட்டு, குணங்களைக் கடலாகச் சொல்லி அக்கடலை எம்பெருமான் உடையவன் என்று இங்ஙனே சொல்லுவதில் என்ன விசேஷம்? என்று சிலர் சங்கிப்பதுண்டு. எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியொன்று தவிர வேறு எந்த க்ரந்தத்திலும் இப்படி பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் நிர்வஹிக்கப்படவேண்டியதான ப்ரயோகம் ஓரிடத்தில் கூடக் காணக் கிடைப்பதில்லை. தேடிப் பார்த்தால் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் க்ரந்தங்களில் கிடைக்குமே யொழிய மற்றையோருடைய க்ரந்தங்களில் அடியோடு கிடைக்கமாட்டாதென்று உறுதி யாகக் கூறலாம்.

இப்படி விலக்ஷணமாக ஸ்வாமி அருளிச் செய்ததற்கு ப்ரபலமான மூலமுண்டு. * தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்* என்கிறபடியே ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளை வளர்ப்பதற்கே அவதரித்தவரான நம் பாஷ்யகாரர் ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளைத் தழுவியே அருளிச் செய்பவர் என்பதை நாம் பல சான்றுகள் காட்டி நிரூபித்திருக்கிறோம். ப்ரக்ருதஸ்தலமும் அதில் தலையான சான்று. நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் (69) * மிகுந் திருமால் **சீர்க்கடலை யுள் பொதிந்த சிந்தனையேன்** * என்று அருளிச் செய்துள்ளார். இப்பாசுரத்தில் குணங்களானவை கடலாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது. வண்டமிழ்மாமுனியான அகஸ்த்ய மஹர்ஷியானவர் உப்புக்கடலை யுட்கொண்டவரென்று ப்ரஸித்தி பெற்றவர். நம்மாழ்வாரெனும் அருந் தமிழ் மாமுனியான தாம் உப்புக்கடலையுட்கொள்ளாமல் பகவத் குணமாகிய அமுதக்கடலை யுட்கொள்ளப்பெற்றவரென்று காட்டிக் கொண்டபடி. இந்த ஸ்ரீஸூக்தியையே அவலம்பித்து ஆசார்ய ஹ்ருதயத்திலும் (3—6.) மேகாபதேச சூர்ணையில் *பூண்ட நாள் சீர்க்கடலையுட் கொண்டு* என்றருளிச் செய்யப்பட்டது. மேகமானது கடலை க்ரஸிப்பதுபோல, மேகமாகச் சொல்லப்படுகிற ஆசார்யர்களும் எம்பெருமானுடைய திருக்குணங்களாகிற கடலை க்ரஸிப்பவர்கள் என்று சொல்லிற்று.

ஆக ஆழ்வார்திருவுள்ளத்தில் பகவத்குணங்கள் கடலாகத் தோன்றினபடியாலே அந்தச் சாயையிலேயே அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றிய எம்பெருமானார் பஹுவ்ரீஹிஸமாஸத்தையிட்டு நிர்வஹிக்கப்படவேண்டியதான ப்ரயோகத்தைச் செய்தருளி குணங்களுக்கு ஸாகரத்வத்தை நிலைநாட்டியருளினாராயிற்று.

ப்ரஸங்காத் ஏதத் ஸமசீலமான மற்றொரு விஷயமும் இங்குத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்தோத்ரரத்னம் முதல் ச்லோகத்தில் ***அகாத பகவத் பக்தி ஸிந்தவே*** என்ற விடத்தில் பாஷ்யம் செய்தருளாநின்ற தேசிகன், ஸ்ரீமந்நாதமுனிகள் பகவத்பக்திக்கு ஸிந்துவானவர் என்று தத்புருஷனாக முந்துற விவரித்து, உடனே **"பக்திம் வா ஸிந்துத்வேந ரூபயித்வா பஹுவ்ரீஹி:"** என்றருளிச்செய்தார். அகாதமான பகவத்பக்தி ஸாகரத்தையுடையவர் என்றபடி. இப்படி பஹுவ்ரீஹியைக் கொண்டது ***காதல் கடல்புரைய விளைவித்த*** (5-3-4) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் பக்தியைக் கடலாகக் கூறியிருப்பது பற்றியேயென்றுணர்க.

"யுஷ்மத்பாதாரவிந்தயுகளா"

ஸ்வாமியருளிச்செய்த யதிராஜவிம்சதியிலுள்ள இந்த ப்ரயோகத்தை அஸாது வென்றுகூற வந்தவர்கள் "புரோவாத சப்தஸமானவசனமாகவேதான் அநுவாத சப்தப்ரயோகம் ஸாதுவாகும்" என்று சாஸ்த்ரஜ்ஞகோஷ்டியில் ஏற்கத்தகாத வொரு நியமத்தைக் காட்டியுள்ளார்கள். இப்படி ஒரு சாஸ்த்ரத்திலும் நிபந்தனை செய்யப்பட்டிருக்கவில்லை. ஸ்ரீஹர்ஷகவி இயற்றிய நாகாநந்தத்தில் முதலங்கத்தில் * **உத்புல்லகமல கேஸரபராக கௌரத்யுதே மம ஹி கௌரி!, அபிவாஞ்சிதம் ப்ரஸித்த்யது பகவதி யுஷ்மத்ப்ரஸாதேந** * என்றுள்ளது. இங்கு **கௌரி** என்று புரோவாதத்தில் ஏகவசனமுள்ளது. மேலே அநுவாதத்தில (த்வத்) என்றில்லை; (யுஷ்மத்) என்றேயுள்ளது. பட்டரும் ஸ்ரீ குணரத்நகோசத்தில் * **ஸ்தோதாரம் தமுசந்தி** * என்றச்லோகத்தில் * **மய்யேவ விச்ராம்யதி** * என்றவிடத்தில் (மயி) என்று புரோவாதத்தில் ஏகவசநநிர்தேசம் செய்து, மேலே அநுவாதத்தில் * யஸ்மாதஸ்மதமர்ஷணீய பணிதி * என்பதில் (அஸ்மத்) என்று அநுநிர்தேசம் செய்தருளினார். இப்படி ப்ரஸ்ஸஹஸ்ரமுண்டு. ஆதலால் இங்கு புரோவாத அநுவாதசப்தங்களைப்பற்றிக் கல்பித்த நியமம் அஸம்பத்தமென்று கழிக்கப்பட்டதாயிற்று.

அன்றியும்; லகுமஞ்ஜூஷையில் **1345, 1368, 1376** முதலிய பக்கங்களில் விபுலவிசாரம் செய்து (த்வத், யுஷ்மத்) என்பவற்றுக்கும் (மத், அஸ்மத்) என்பவற்றுக்கும் ஒரு வாசியுமில்லாமை நிரூபிக்கப்பட்டுள்ளது- **சாம்யது பரேஷாம் நிரர்த்தக: கோலாஹல:.**

வேதாந்த ஸித்தாந்தம்.

ஜீவாத்மதத்வ நிரூபணம்.

*** தத்வஜ்ஞாநாத் முக்தி: *** என்பது வேதாந்திகளின் கொள்கை. பெரும்பாலும் இதுவே பல மதத்தினருடையவும் கொள்கை என்னலாம். தத்வமென்றால் எது? தத்வங்கள் எத்தனை? மோக்ஷமாவது என்ன? என்று உட்புகுந்து விசாரிக்குமளவில் பலபல மதவேற்றுமைகள் ஏற்படுமானாலும் 'தத்வஞானத்தினால்தான் முக்தி' என்னும் கொள்கையில் பல மதங்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றனவென்று காண்கிறோம். வேதாந்திகளின் மதப்படிக்கு [அதிலும் விசிஷ்டாத்வைதிகளின் மதாநுஸாரமாக] ஈண்டு தத்வ நிரூபணம் செய்கின்றோம்.

தத்துவங்களை ஏற்றக்குறைவாகக் கொள்ளுகிற பாஹ்யகுத்ருஷ்டிகள் போலன்றியே நாம் மூன்றே தத்துவமெனக் கொள்ளுகின்றோம். "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா" என்று உபநிஷத்து கூறுதலால் சேதநன், அசேதநம், ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்களையும் அறிந்தே, அதாவது அவற்றின் ஸ்வரூபஸ்வபாவங்களையறிந்தே முக்திபெறமுடியும் என்பது நம் ஆசிரியர்களின் கொள்கை.

ஆனால், **"பசுர் மநுஷ்ய: பக்ஷீவா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம் பதம்."** [ஒரு வைஷ்ணவனோடு ஸம்பந்தம் பெற்ற பசு பக்ஷி முதலியனவும் அந்த வைஷ்ணவாபிமானத்தினாலேயே முக்திபெற முடியும்] என்றும், *** யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா:"** [ஒரு வைஷ்ணவனுடைய கையால் தொடப்படுதலும் கண்ணால் கடாக்ஷிக்கப்பெறுதலுமான பாக்கியம்பெற்ற ஸ்தாவரங்களுக்கும் முக்தியுண்டாகும்] என்றும் சொல்லப்பட்டிருக்க, தத்வஜ்ஞானமுண்டானாலல்லது மோக்ஷமுண்டாகமாட்டாது என்று சொல்லக்கூடுமோ? பசு பக்ஷி முதலிய திர்யக்குக்களுக்கும் ஸ்தாவரங்களுக்கும் தத்வஜ்ஞாந ப்ரஸக்தியில்லையே! என்று சங்கையுண்டாகும். இதற்கு ஆசாரியர்கள் கூறும் பரிஹாரமென்னவென்றால், மோக்ஷத்தில் இச்சையுடைய சேதநனுக்கே தத்வஜ்ஞானமுண்டாக வேணுமென்கிற தத்தனையாகையாலே, மேலே சங்கித்த இடத்தில் முமுக்ஷுத்வமேயில்லை. ஆதலால் நியமத்திற்கு பங்கமில்லை. அவ்விடத்திலும் முமுக்ஷுத்வமும் தத்வஜ்ஞானமுமாகிற இரண்டும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவனுடைய அபிமானத்தில் ஒதுங்கின பசு பக்ஷ்யாதிகளுக்கு இல்லையானாலும் அபிமானிக்கிற விலக்ஷணாதிகாரிக்கு இவை யிரண்டும் குறையற்றனவே யென்பர். இவ்விஷயத்தில் மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திகாண்மின்.—"அபிமாநியானவனுடைய ஜ்ஞான விசேஷத்தைக் கடாக்ஷித்தே அபிமாநாந்தர்ப்பூதமான இவற்றுக்கும் ஈச்வரன் கார்யம் செய்கையாலே தத்வஜ்ஞாநாந்மோக்ஷம் என்றவிது அவ்விடத்திலும் ஸத்வாரகமாக ஸித்திக்கும்" என்பதாம்.

மோக்ஷஸித்திக்காக மூன்று தத்துவங்களையும் அறியவேணுமென்கிற நிர்ப்பந்தம் எதுக்கு? **"தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி, நாந்ய: பந்தா அயநாய வித்யதே"** என்று வேதாந்தங்கள் ஈச்வரதத்வமொன்றுமே மோக்ஷஸாதனமென்று ஓதியிருக்க மற்றையிரண்டு தத்துவங்களையுங்கூட அவசியம் அறியவேணுமென்கிற நிர்ப்பந்தம் பொருந்துமோ? என்று சிலர் சங்கிப்பர்கள். கேண்மின், ஈச்வர தத்வமொன்றை நன்றாக அறிந்தால்போதும். ஆனால் அந்த தத்வத்தை அறியும்போது ஸகல சேதநாசேதநவிலக்ஷணமாகவும் அந்த

இரண்டு தத்வங்களுக்குக் காரணமாகவும் வ்யாபகமாகவும் தாரகமாகவும் நியாமகமாகவும் அறியவேண்டுமன்றோ. அவற்றின் ஸ்வரூபஸ்வபாவங்களை அறியாதபோது இப்படியெல்லாம் அறிந்துகொள்ள இயலாதாகையாலே மூன்று தத்வங்களையும் அறியவேணுமென்றது மிகப் பொருந்தும். "**தமேவம் வித்வாந்**" என்ற ச்ருதியே "**போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா**" என்றும் "**ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா**" என்றும் ஓதியிருக்கையாலே வேதாந்த விரோத ப்ரஸங்கமுமில்லையென்றுணர்க.

மூன்று தத்துவங்களாவன, சித்தும் அசித்தும் ஈச்வரனுமென்று தெரிவித்தோம். அறிவுள்ள வஸ்து சித்து எனப்படும். அறிவில்லாத வஸ்து அசித்து எனப்படும். இவ்விரண்டிற்கும் நியாமகனுக வுள்ளவன் ஈச்வரனெனப்படுவன். இவற்றுள் முதல் தத்துவமான சித்தைப்பற்றிப் பேசுவோம். ஜீவாத்மாவையே **சித்து** என்கிறது. அறிவுள்ளவஸ்து என்னும் பொருளையுடையதான **சித்து** என்னுஞ் சொல்லானது பரமாத்மாவையும் சொல்லக்கடவதேயானாலும் அவனுக்கு ஈச்வரனென்கிற சொல் தனிப்பட ஏற்பட்டிருப்பதனால் இங்கு **சித்து** என்கிற சொல்லை ஜீவாத்மாவுக்கு மாத்திரமே வாசகமாகக் கொள்ளக் குறையில்லை.

ஜீவாத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்கள்.

தேஹமே ஆத்மா என்றும், இந்திரியங்களே ஆத்மா என்றும், மனஸ்ஸே ஆத்மா என்றும், ப்ராணனே ஆத்மா என்றும், புத்தியே ஆத்மா என்றும் இப்படிப் பலர் பலவகையாகச் சொல்லுவதுண்டு. இவை யொன்றும் ஆத்மா அல்ல. இவையெல்லாவற்றினும் வேறுபட்டு '**அஹம்**' (நான்) என்கிற வியவஹாரத்திற்கு இலக்கான பொருளே ஜீவாத்மா எனப்படும். தேஹம் இந்திரியம் முதலானவை ஆத்மா அல்ல என்னுமிடத்தை நன்கு விவரித்துக் காட்டுவோம்.

என்னுடைய தேஹம், என்னுடைய இந்திரியம், என்னுடைய மனம், என்னுடைய பிராணன், என்னுடைய புத்தி என்றிப்படி 'என்னுடையது' என்கிற உணர்ச்சிக்கும் அப்படிப்பட்ட வ்யவஹாரத்திற்கும் விஷயமாய்க் கொண்டு தேஹாதிகள் தோற்றுகின்றன. இதை நன்கு ஆலோசிக்கவேணும். என்னுடைய என்கிற சொல்லானது நான் என்பதன் ஆறும் வேற்றுமை. நான் என்பதற்கு எது அர்த்தமோ அதுவே தேஹம் இந்திரியம் .... என்பவற்றுக்கும் அர்த்தமாக இருக்கமுடியாது. நான் தேஹம், நான் இந்திரியம் என்றிப்படி வ்யவஹாரமிருந்தால் தான் அஹமர்த்தமும் தேஹாதிகளும் ஒன்றேயாயிருக்கமுடியும். 'என்னுடைய புத்தகம்' 'என்னுடைய வண்டி' என்றால் புத்தகமும் வண்டியும் அஹமர்த்தத்திற்காட்டில் வேறுபட்டவையேயன்றி அஹமர்த்தமல்ல என்று எப்படித் தெரிந்து கொள்ளுகிறோமோ, அப்படியே 'என்னுடைய தேஹம்' 'என்னுடைய இந்திரியம்' இத்யாதி வ்யவஹாரங்களினால் தேஹாதிகள் அஹமர்த்தமல்ல, அஹமர்த்தத்திற்காட்டில் வேறுபட்டவை என்று தெரிந்து கொள்ளக்குறையில்லை.

அன்றியும், என்னுடைய தேஹம் என்னுடைய இந்திரியம் என்று தோற்றுவது போல 'இது தேஹம்' 'இது இந்திரியம்' என்றிப்படி தேஹாதிகள் இதம்புத்திவ்யவஹாரங்களுக்கும் விஷயமாய்க்கொண்டு தோற்றுகின்றன. இதனாலும் அஹமர்த்தத்திற்காட்டில் அவை வேறு பட்டவை என்று அறுதியிடப்பெறும். ஆத்மா இப்படியல்லாமல் நான் என்கிற சொல்லுக்கு விஷயமாய்க் கொண்டே தோற்றுகையாலே தேஹம் முதலியவற்றிற்காட்டில் ஆத்மா வேறுபட்டவனுவன்.

இங்கே சிலர் சங்கிக்கக் கூடும்; ஆத்மா எப்படி அஹம்புத்தி விஷயமாய்க் கொண்டு தோற்றுகின்றானே அப்படியே தேஹமும் "ஸ்தூலோஹம், க்ருசோஹம்" என்று அஹம்

புத்தி விஷயமாகித் தோற்றவில்லையோ? 'நான் ஸ்தூலன், நான் க்ருசன்' என்கிற வ்யவஹாரங்கள் அபலபிக்க முடியாதவைகளன்றோ? ஸ்தூலத்வமோ க்ருசத்வமோ ஆத்மாவுக்குக் கிடையாதே, தேஹத்துக்குத் தானே உள்ளது, 'ஸ்தூலோஹம், க்ருசோஹம்' என்கிற வ்யவஹாரங்களில் தேஹம் அஹமர்த்தமாய்க் கொண்டு தோற்றுகையாலே இது ஆத்மாவாயிருக்கத் தட்டென்? என்று (சங்கிக்கக்கூடும்).

இந்தசங்கைக்குப் பரிஹாரம் சொல்லுகிறோம், தேஹமானது 'ஸ்தூலோஹம் க்ருசோஹம்' என்று அஹம்புத்திவ்யவஹார விஷயமாய்க் கொண்டு ஆத்மத்வேந தோற்றுவது ஜாக்ரத்தசையில் மாத்திரமே யன்றி ஸுஷுப்தி தசையில் இல்லையே, ஜாக்ரத்தசையோடு ஸுஷுப்தி தசையோடு வாசியற எப்போதும் ஆத்மா தோற்றுகிறபடியைக் காணலாம். எங்ஙனே காணலாமென்னில், "உறங்குவதற்கு முன்பு இவையெல்லாமறிந்திருந்த நான் உறங்குகிறபோது என் உடம்புமுட்பட அறிந்திலேன்" என்று ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான வ்யவஹாரமுள்ளது. இதனால் இரண்டு அவஸ்தையிலும் தேஹத்திற்காட்டில் வேறுபட்ட ஆத்மாவுளனென்பது தேறிநிற்கும்.

அன்றியும், ஜனனமரணங்களை அடையுந்தன்மையினாலே தேஹம் ஒருக்கால் தோற்றி ஒருக்கால் தோற்றாதிருக்கக் காண்கிறோம், ஆத்மா ஜநநமரணரஹிதனாய்க் கொண்டு எப்போதும் தோற்றா நின்றான். "நான் ஜன்மாந்தரத்தில் பண்ணினவதினுடைய பலன் இது" என்கிற லோகவ்யவஹாரமும் இங்குச் சான்றாகும். இத்தகைய ஹேதுக்களாலே தேஹாதிவிலக்ஷணன் ஆத்மா என்பது அறியத்தக்கது. இங்ஙனே யுக்தி கொண்டு ஸாதிப்பது ஒருபுறமிருக்க, சாஸ்த்ர பலத்தாலும் இது ஸித்திக்கக்கடவது. நாம் எதையும் யுக்தியைக் கொண்டே ஸாதிப்பவர்களல்லோம், யுக்திக்கு ஒருகால் கண்ணழிவு ஏற்படவுங் கூடும், எதற்கும் நமக்கு சாஸ்த்ரமே ப்ரபலப்ரமாணம். * [illegible] * [illegible] * [illegible] * [illegible] ॥ [illegible] ॥ * என்றிப்படி ச்ருதி ஸ்ம்ருதி முதலிய ஸகல சாஸ்த்ரங்களாலும் ஆத்மா தேஹாதி விலக்ஷணனென்னுமிடம் அறுதியிடப்பட்டிருக்கின்றது.

இப்படி தேஹாதி விலக்ஷணமான ஆத்ம வஸ்துவானது அஜடமென்றும் ஆநந்தரூபமென்றும் நித்ய மென்றும் அணுவென்றும் அவ்யக்தமென்றும் அசிந்த்யமென்றும் நிரவயவமென்றும் நிர்விகாரமென்றும் ஜ்ஞாநாச்ரய மென்றும் ஈச்வரனுக்கு சரீரபூதமென்றும் சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிறது. இவற்றையெல்லாம் விசதமாகத் தெரிந்து கொள்வதே ஆத்மஸ்வரூபஜ்ஞாநமாகும். அடைவே இவற்றை விவரிக்கிறோம்.

ஆத்மாவின் அஜடத்தன்மை.

ஆத்மா அஜடமாயிருக்கையாவது ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கை. தன்னுடைய தோற்றத்திற்கு இன்னொரு வஸ்துவை யெதிர்பார்க்க வேண்டாதபடியிருக்கை. ஒரு தீபமானது இன்னொரு தீபத்தை அபேக்ஷியாமலே தன் வ்யவஹாரத்திற்குத் தான் ஹேதுவாகிறாப்போலே ஆத்மவஸ்துவானது ஜ்ஞாநத்தைக் கூட அபேக்ஷியாமல் தானே தோற்றிக் கொண்டிருப்பதுதான் அஜடத்வமாவது. * [illegible] * "அத்ராயம் புருஷ: ஸ்வயம் ஜ்யோதிர் பவதி" என்பது முதலான ப்ரமாணங்கள் இங்கே காண்க.

*பா—2.

ஆத்மாவின் ஆனந்தரூபத்வம்

ஆத்மவஸ்து ஆனந்தரூபமுமாயிருக்கு மென்று சொன்னோம், அது எங்ஙனே யென்னில், ஆத்மஸ்வரூபம் தனக்குத்தானே ஸுகரூபமாயிருக்கும். இதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டியதற்கு சாஸ்த்ரப்ரமாண மொன்றும் தேடவேண்டா, உறங்கி யெழுந்தவன் 'நான் ஸுகமாக வுறங்கினேன்' என்று சொல்லுவது ஸர்வஸம்ப்ரதிபந்நம். உறக்க நிலைமையில் வெளி விஷயங்களின் அநுபவம் சிறிதுமில்லையென்றும் கேவலம் ஆத்ம ஸ்வரூபம் மாத்திரமே ஸ்புரித்துக் கொண்டிருக்கிறதென்றும் தெரிந்து கொண்டிருக்கிறோம். அத்தகைய உறக்கம்விட்டு எழுந்தவன் 'ஸுகமாக உறங்கினேன்' என்றால் அந்த ஸுகம் ஸ்வரூப ஸுகமேயாக வேணுமேயன்றி வேறொரு ஸுகத்திற்கு ப்ரஸக்தியில்லையே. 'ஸுகமாக உறங்கினேன்' என்பதற்கு 'இப்போது ஸுகம் உண்டாகும்படி உறங்கினேன்' என்று பொருள் கொள்ளலாகாதோ வென்னில், உள்ள சொல்வடிவத்திற்கு இங்ஙனம் பொருளாக வழியில்லையே. 'இனிதாகப் பாடினேன்' என்று சொன்னால், பாடும்போதே இனிமை யுண்டாகப் பாடினேன் என்று பொருளாவதுபோல இங்கும் உறங்கும்போதே ஸுகமுண்டாகும்படி உறங்கினேன் என்று பொருள் படுவதுதான் பொருத்தம். * [illegible] இத்யாதி ஸ்ரீபாஷ்ய ஸூக்தியினாலும் இது விசதம். "நிர்வாணமய ஏவாயமாத்மா" ஜ்ஞாநாநந்த மயஸ் த்வாத்மா * இத்யாதி ப்ரமாணங்களும் ஆத்மஸ்வரூபம் ஸ்வத: ஸுகரூபம் என்பதை யுணர்த்தும். "ஸ்வரூபம் அநுகூலமன்றாகில் ப்ரேமாஸ்பதத்வம் கூடாது" என்பது மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தி.

ஆத்மாவின் நித்யத்வம்.

ஆத்ம ஸ்வரூபம் நித்யமென்று சொன்னோம். நித்யத்வமாவது ஒரு நாளும் அழிவின்றிக்கே எப்போதுமுண்டாகை. இதில் ஒரு சங்கை தோன்றும், ஆத்மா எப்போது முளனென்று கொண்டால் பல ச்ருதிவாக்யங்களால் ஆத்மாவுக்குச் சொல்லப்படுகிற ஜன்ம மரணங்கள் எப்படி கூடும்? "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்பது முதலான பல ப்ரமாணங்களினால் ஆத்மாவுக்கு ஜன்ம மரணங்கள் ஏற்படுகின்றனவன்றோ? என்று சங்கிக்கக்கூடும், இதற்குச் சொல்லுகிறோம். இவற்றில் சொல்லப்படுகிற ஜந்ம மரணங்களானவை ஆத்மாவுக்கு உத்பத்தி விநாசரூபங்களல்ல. ஜன்மமாவது—தேஹ ஸம்பந்தம். மரணமாவது—தேஹ வியோகம். ஆத்மா தேஹத்தோடு ஸம்பந்தம் பெறுவதையே ஜனன மென்றும், அந்த தேஹத்தைவிட்டு நீங்குதலையே மரண மென்றும் வ்யவஹரிக்கிறோ மென்றவாறு. * [illegible] * [illegible] * என்பது முதலிய பல ப்ரமாணங்களினால் ஆத்மா நித்யன் என்பது அறுதியிடப் பட்டுளது.

ஆத்மாவின் அணுத்வம்.

ஆத்மஸ்வரூபம் அணுவென்று அறியும்படி யெங்ஙனே யென்னில்; ஆத்மாவுக்கு ஹ்ருதய ப்ரதேசத்தில் இருப்பையும் அங்கு நின்றும் உத்க்ரமணத்தையும் பிறகு சில லோகங்களுக்குப் போவதையும் இவ்வுலகத்தை நோக்கித் திரும்புதலையும் வேதாந்த சாஸ்த்ரம் சொல்லுகையாலே ஆத்மஸ்வரூபம் அணுவாகக் கடவது. விபுவாகில் இவையொன்றும் கூடாதன்றோ. * உத்க்ராந்திகத்யாகதீநாம் * என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தினால் இது மூதலிக்கப்பட்டது. * [illegible] * என்பது முதலான ப்ரமாணங்களுங் காண்க. ஆத்மா அணுபரிமாணனாய் ஹ்ருதய ப்ரதேசத்திலே நின்று விடுமாகில்

ஆபாத சூடம் சரீர மெங்குமொக்க ஸுகதுக்கங்களைத் தெரிந்து கொள்வது எங்ஙனே யென்னில், ரத்னம் விளக்கு ஸூர்யன் முதலான ப்ரபாவத்தான பதார்த்தங்கள் ஏகதேசத்தி லிருக்கச் செய்தேயும் அவற்றினுடைய ப்ரபை சுற்றெங்கும் வியாபிக்கிருப்போலே, ஆத்மா ஹ்ருதயப்ரதேசத்திலே யிருக்கச் செய்தேயும் அதனுடைய தருமமான ஞானமானது எங்கு மொக்க வியாபிக்கையாலே சரீரமெங்குமொக்க ஸுகதுக்கங்களை புஜிக்கைக்கு ஒரு குறையு மில்லை. *குணாத்வாலோகவத் * என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தில் இவ்வர்த்தம் காண்க.

ஆத்மாவின் அவ்யக்தத்வம்.

ஆத்மாவை அவ்யக்தமென்றும் சொல்லியிருக்கிறது. உலகில்காணும் பொருள்களை க்ரஹிக்கின்ற கண் முதலியவற்றால் தோற்றாதிருக்கைதான் அவ்யக்தத்வமாவது. *ச்சேதநாதியோக்யாநி வஸ்தூநி யை: ப்ரமாணை: வ்யஜ்யந்தே தைரயம் ந வ்யஜ்யத இதி அவ்யக்த:* என்கிற கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியும் அநுஸந்தேயம். ஒரு ப்ரமாணத்தாலும் தோற்றாதிருக்கைதான் அவ்யக்தத்வம்' என்று கொள்ளலாகாதோ வென்னில், அங்ஙனம் கொள்ளலாகாது, துச்சமென்னவேண்டி வருமாகையாலே. மாநஸஜ்ஞானத்திற்கு விஷயமாமத்தனையல்லது இந்திரியஜ்ஞானத்திற்கு விஷயமாமதன்று– என்றுகொள்க. திருவாய்மொழியில் "சென்றுசென்று பரம்பரமாய்" என்று ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை அருளிச்செய்கிற ஆழ்வாரும் "ஞானம் கடந்ததே" என்று இந்திரிய ஜ்ஞானத்திற்கு அகோசரமாயிருக்கையையே அருளிச்செய்தாரென்பதும் இங்கு உணரத்தக்கது.

ஆத்மாவின் அசிந்த்யத்வம்.

ஆத்மஸ்வரூபத்தை அசிந்த்யமென்றும் சொல்லியிருக்கிறது. 'அசிந்த்யம்' என்பதற்கு 'நினைக்கவொண்ணாதது' என்று பொருள். ஒருபடியாலும் நினைக்கவொண்ணாதது என்று பொருள் கொள்ளலாகாது. அங்ஙனம் கொண்டால் ஆத்மஸ்வரூப விஷயமான ச்ரவணம் மநநம் எல்லாம் வ்யர்த்தமாக வேண்டிவரும். ஆகையால் அங்ஙனம் பொருள்கொள்ளலாகாது. அசித்தோடு ஸஜாதீயமாக நினைக்கவொண்ணாதிருக்கையே அசிந்த்யத்வமென்று கொள்ளவேணும். பகவத்கீதையில் * அவ்யக்தோயம் அசிந்த்யோயம் * என்றுள்ள விடத்திலே பாஷ்யமும் காணத்தக்கது.

ஆத்மாவின் நிரவயவத்வம்

ஆத்மஸ்வரூபம் நிரவயவமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. நிரவயவத்வமாவது அவயவ ஸமுதாய மல்லாதபடியிருக்கை. "விஜ்ஞாநமய:" என்றும் "விஜ்ஞாநகந:" என்றும் சொல்லுகிறபடியே ஞானமே வடிவெடுத்ததாகையாலே அசித்தான பொருள்களைப்போலே அவயவஸங்காதரூபமாக இராது ஆத்மவஸ்து என்று கொள்க.

ஆத்மாவின் நிர்விகாரத்வம்.

கீழே உதாஹரித்துக்காட்டிய கீதாச்லோகத்திலே "அவிகார்யோயமுச்யதே" என்று நிர்விகாரமாகவும் ஆத்மஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கின்றது. அசித்துப்போலே விகாரப்படுகையன்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கும் ஆத்மஸ்வரூபம் என்க. "அம்ருதாக்ஷரம் ஹர:" என்றும் "ஆத்மா சுத்தோக்ஷர:" என்றும் அக்ஷரசப்தத்தினால் சொல்லப்படுகிற வஸ்துவாகையாலே க்ஷணந்தோறும் விகாரப்படுவதையே இயல்பாக வுடையதாகி க்ஷரசப்தவாச்யமான அசித்துப்போலே விகரிக்காமல் ஸதா ஏகரூபமாயிருக்குமென்றதாயிற்று.

ஆக இப்படியிருக்கையாலே சஸ்த்ரத்தால் சேதித்தல், அக்நியால் தஹித்தல், ஜலத்தால் நனைத்தல், காற்று வெயில் முதலியவற்றால் உலர்த்தல் செய்கைக்கு அயோக்யமாயிருக்குமிவ்வாத்மவஸ்து. சஸ்த்ரமானது ஒன்றைச்சேதிக்க வேணுமானாலும், அக்நியானது ஒன்றை தஹிக்க வேணுமானாலும் அந்தந்த வஸ்துக்களிலே வியாபித்துச் செய்யவேணுமன்றோ. ஆத்மா ஸர்வ அசித்தத்வ வ்யாபகனாகையாலே அவற்றிற்காட்டில் மிகவும் ஸூக்ஷ்மபூதனாகையாலும், வ்யாப்யமும் ஸ்தூலமுமாயிருக்கிற இவை வ்யாபகமும் ஸூக்ஷ்மமுமான ஆத்மவஸ்துவை வியாபித்து விகாரப்படுத்த மாட்டாமையாலே சஸ்த்ரம் முதலியவற்றாலாகும் சேதநம் முதலானவற்றுக்கு (ஆத்மவஸ்து) அநர்ஹமாயிருக்குமென்றதாயிற்று. "நைநம் சிந்தந்தி சஸ்த்ராணி *அச்சேத்யோயமதாஹ்யோயம்" இத்யாதி பிரமாணங்கள் இங்கே காணத்தக்கன.

ஆத்மா தேஹபரிமாணனல்லன்

ஜைநர்கள் ஆத்மாவை தேஹபரிமாணன் என்கிறார்கள். "பாதே மே வேதநா, சிரஸி மே ஸுகம்" என்கிறாப்போலே ஆபாதசூடம் தேஹத்திலுண்டாகும் ஸுகது:கானுபவமானது ஆத்மா தேஹபரிமாணனல்லாதபோது கூடாதென்றும், ஆத்மா தன் கருமங்களுக்கு அநுகூலமாகப் பரிணமித்து அந்தந்த தேஹத்தளவாக இருக்குமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். அது பொருந்தாது. ச்ருதியானது ஆத்மாவை நிர்விகாரனென்று முறையிடுகையாலே அந்தச்ருதியே டு விரோதிக்கும். "அம்ருதாக்ஷரம்ஹர:" என்பதே நிர்விகாரத்வத்தை யோதுகின்ற சுருதியாகும். "ஏஷோணுராத்மா" "வாலாக்ரஶதபாகஸ்ய" இத்யாதி ச்ருதிகளும் 'ஆத்மா தேஹபரிமாணன்' என்கிற வாதத்திற்கு விரோதிகளென்பது இங்கறியத்தக்கது.

ஆத்மா தேஹபரிமாணன் என்கிறபக்ஷம் ச்ருதிவிருத்தம் என்னுமளவேயன்று. யுக்தி விருத்தமுமாகும். எங்ஙனே யென்னில், யோகஸித்திவாய்ந்தவர்களாய் ஸௌபரியைப் போலே ஏககாலத்திலே பற்பல தேஹங்களைப் பரிக்ரஹிக்குமவர்களுக்கு, தங்களுடைய ஸ்வரூபத்தை அநேகமாகச் சின்னமாக்கிக்கொண்டு அந்தந்த தேஹங்களைப் பரிக்ரஹிக்க வேண்டி வருமாதலால் தேஹபரிமாணனென்னும் பக்ஷத்தில் யோகிகள் ஸ்வரூபத்துக்கு சைதில்யம் வரும். பரகாயப்ரவேச முகத்தாலே அநேக சரீரங்களைப் பரிக்ரஹிக்கிற யோகிகள் ஸ்வரூபத்துக்கு, ஸ்தூலமான சரீரத்தை விட்டு ஸூக்ஷ்மமான சரீரத்தைப் பரிக்ரஹிக்குமளவில் இதுக்கெல்லாம் அது அவகாசம் போதாமையாலே சைதில்யம் வரும் என்றுமுணர்க. *னவம் ஆத்மாகார்த்ஸ்ந்யம் என்கிற ஸூத்ரத்தில் சொல்லுகிறபடியே அல்பமஹத் பரிமாணங்களான கஜபிபீலிகாதி சரீரங்களை ஸ்வகர்மாநுகுணமாகப் பரிக்ரஹிக்குமவர்களுக்கு, கஜ சரீரத்தைவிட்டு பிபீலிகா சரீரத்தைப் பரிக்ரஹிக்குமளவில் யானையுடலோடொத்த பரிமாணமாயிருக்குமந்த ஸ்வரூபத்துக்கு எறும்பு சரீரம் அவகாசம் போதாமையாலே சைதில்யம் வரும் என்றுமுணர்க.

ஆத்மாவின் ஜ்ஞாநாச்ரயத்வம்.

'ஜ்ஞானமே ஆத்மா' என்றும் 'ஜ்ஞானத்துக்கு ஆச்ரயம் ஆத்மா' என்றும் உபநிஷத்து முதலிய பிரமாணங்களினால் அறிகின்றோம். ஜ்ஞானமே ஆத்மா என்பதைப் பற்றிப் பிறகு பேசுவோம். ஜ்ஞானத்துக்கு ஆச்ரயம் ஆத்மா என்பதைப் பற்றி இப்போது நிரூபணம் செய்வோம். ஆத்மா ஜ்ஞானத்திற்கு இருப்பிடமாயிருக்கும். தீபமும் அதன் ஒளியுமாகிற இரண்டும் தேஜோத்ரவ்யமாயிருக்கச் செய்தேயும் தீபமானது ஒளிக்கு ஆச்ரயமாயிருப்பதுபோல, ஆத்மா தானும் ஜ்ஞாநஸ்வரூபனாயிருக்கச் செய்தே தன்னுடைய தருமமான

ஜ்ஞாநத்திற்குத் தன்னை யொழிய தனிப் பட்டிருத்தலாவது தனிப்பட்டுத் தோன்றுதலாவது இல்லாதபடி தான் ஆதாரமாயிருத்தலே ஜ்ஞாநாச்ரயத்வமாகும். "விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்" "ஜாநாத்யேவாயம் புருஷ:" என்பது முதலான ப்ரமாணங்களினால் ஆத்மா ஜ்ஞாநாச்ரய பூதனென்பது திண்ணமாக அறியப்படும்.

ஆத்மா ஜ்ஞாந மாத்ரமே யல்லன்.

பௌத்தர் முதலான சில புறமதத்தவர்கள் இப்படி ஆத்மா ஜ்ஞாநாச்ரயபூதன் என்பதை இசையாதே ஜ்ஞாநமாத்ர மென்று சொல்லுவதுண்டு. அது பிசகு. ஆத்மாவுக்கு ஜ்ஞாநாச்ரயத்வமன்றிக்கே கேவலம் ஞானமாயிருக்குமளவே யுள்ளதாகில் "நான் இத்தை யறியாநின்றேன்" என்று உலகத்தில் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமாகக் காண்கிற வ்யவஹாரம் அஸங்கதமாக வேண்டி வரும். "நான் அறிவு" என்று தன்னை ஜ்ஞாநமாத்ரமாகவன்றோ சொல்லிக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட வ்யவஹாரம் ஒரு வ்யக்தியினிடத்தும் காண்பதில்லை. "இவ்வர்த்தத்தை நானறியா நின்றேன்" "இவ்விஷயத்தை நான் அறிந்து கொண்டேன்" என்றிப்படியே வ்யவஹாரங்கள் எங்கும் காண்கையாலே, விஷயத்தை க்ரஹிப்பதானதொரு ஜ்ஞாநத்திற்குத் தான் ஆச்ரயமென்னுமிடம் நன்கு தெரிகின்றதன்றோ. இப்படி ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வம் ப்ரத்யக்ஷஸித்தமாகையாலே கண்ணழிவற்றதென்று கொள்ளக் கடவது. "அஹமிதமபிவேத்மீதி ஆத்மவித்த்யோர் விபேதே ஸ்புரதி யதி ததைக்யம் பாஹ்யமப்யேகமஸ்து" (ஸ்ரீரங்கராஜஸ்தவம்) என்கிற பட்டர் ஸ்ரீ ஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம்.

ஆத்மாவை ஜ்ஞாதா வென்று தெரிந்து கொண்டபோதே கர்த்தா வென்றும் போக்தா வெனறும் தெரிந்து கொண்டதாகும். இன்னது ஹேயம், இன்னது உபாதேயம் என்கிற ப்ரதிபத்திக்கு ஜ்ஞாத்ருத்வமானது ஹேதுவாயிருக்கு மாகையாலே, ஹேயங்களை விடுகையிலும் உபாதேயங்களைப் பற்றுகையிலும் சிகீர்ஷை யுண்டாகி அதடியாகக் கர்த்ருத்வ முண்டாகிறது. எவன் ஒரு கார்யத்தைச் செய்கிறானோ அவன் அதனாலுண்டாகும் பலனை அநுபவிப்பவனுமாகிறான். ஆகவே கர்த்தாவானபோதே போக்தாவாகிறான். ஆனபின்பு ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் சொன்னது கர்த்ருத்வ போக்த்ருத்வங்களும் சொன்னபடியாகக் குறையில்லை.

கர்த்ருத்வம் ப்ரக்ருதிக்கன்று, ஆத்மாவுக்கே.

இப்படி ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமா யிருந்துள்ள கர்த்ருத்வத்தை ஸாங்க்யர்கள் ப்ரக்ருதிக்கே உள்ளதாகக் கொள்ளுகின்றார்கள், பகவத் கீதையில் "கார்யகாரண கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே, புருஷஸ்ஸுகது:க்காநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே" என்று சொல்லுகையாலே 'கர்த்ருத்வமுள்ளது ப்ரக்ருதிக்கே. ஆத்மாவுக்கு கர்த்ருத்வமன்றிக்கே போக்த்ருத்வமே யுள்ளது' என்று ஸாங்க்யர்கள் நிரூபிக்கின்றார்கள். அது பிசகு. ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமாய் ஆத்மாவுக்கு அஃதில்லையாகில் ஆத்மாவுக்கு சாஸ்த்ரவச்யத்வமும் போக்த்ருத்வமும் குலைந்ததாகும். சாஸ்த்ரவச்யத்வமாவது—விதிநிஷேதரூபமான சாஸ்த்ரத்துக்குத் தான் அதிகாரியாய்க் கொண்டு அதின் வசத்திலே நடக்கவேண்டுகையாம். இதைச்செய், இதைச் செய்யாதே என்று சாஸ்த்ரங்களானவை பலவற்றை விதித்தும் பலவற்றை மறுத்தும் கூறியிருக்கின்றன. இந்த விதிநிஷேதங்கள் சேதநனைப் பற்றியேயல்லது ப்ரக்ருதியைப் பற்றியல்ல. ப்ரக்ருதிக்கேதான் கர்த்ருத்வமென்னில் சாஸ்த்ரங்களிற்காணும் விதி நிஷேதங்கள் ப்ரக்ருதியை நோக்கியவை என்ன வேணும்; ஆகவே சாஸ்த்ரவச்யத்வம்

சேதனனுக்குக் குலைந்ததாகும். அன்றியும், விஹிதங்களைச் செய்து நிஷித்தங்களை விலக்கி வர்த்திக்கின்ற சேதநன் நல்ல பலன்களை யனுபவிக்கையும், விஹிதங்களைவிட்டு நிஷித்தங்களைச்செய்து திரியும் சேதநன் தீயபலன்களை யனுபவிக்கையும் ஸர்வஸம்ப்ரதிபந்நமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட ஸுக துக்கரூப பல போக்த்ருத்வமும் சேராமற் போகும். கிம் பஹுனா? சேதநன் கர்த்தாவாகாத போது சாஸ்த்ரமே வீண் என்ன வேண்டிவரும்.

"ஸ்வர்க்க காமோ யஜேத" என்றும் "முமுக்ஷு: ப்ரஹ்ம உபாஸீத" என்றும் பல பல வகையான விதிகளைக் காணாநின்றோம். ஸ்வர்க்கம் மோக்ஷம் முதலான பலன்களை எந்த சேதநன் அநுபவிக்கவேண்டியவனோ அவனையே யன்றோ கர்த்தாவாக சாஸ்த்ரம் நியோகிக்கிறது. ஆகவே பலனை புஜிப்பவனே கர்த்தாவாக வேணுமென்பது புநருக்தம். அசேதநத்துக்குக் கர்த்ருத்வமாகில் சேதநனைக் குறித்து விதிக்கவே கூடாது. சாஸநம் பண்ணுவது எதுவோ அதற்கு சாஸ்த்ரம் என்று பெயர். சாஸநமாவது ப்ரவர்த்தனம். சாஸ்த்ரம் ப்ரவர்த்தனம் பண்ணுவதானது அறிவையுண்டு பண்ணும் முகத்தாலேயாம். அசேதநமான ப்ரக்ருதிக்கு அறிவை யுண்டு பண்ண முடியாதன்றோ. ஆகவே சாஸ்த்ரம் ஸார்த்தகமாக வேணுமானால் போக்தாவான சேதநனுக்கே கர்த்ருத்வமாக வேணும். இவ்விஷய மெல்லாம் "கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்" என்கிற ஸூத்ரத்திநாலும் விசதம்.

கர்த்ருத்வத்தின் விசேஷ விவரணம்.

எல்லாவகையான கர்த்ருத்வமும் சேதநனுக்கு ஸ்வரூப ப்ரயுக்த மென்று நினைக்க வேண்டா, சோறுண்ணுதல், தண்ணீர் குடித்தல், ஸ்த்ரீகளை புஜித்தல் முதலிய போகங்களை யுத்தேசித்துப் பண்ணும் ஸ்வவ்யாபாரங்களில் கர்த்ருத்வம் ஔபாதிகமாகையாலே ஸ்வரூப ப்ரயுக்த மன்று, ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற குணங்களினுடைய ஸம்ஸர்க்கத்தாலே யுண்டானது. இவ்வர்த்தம் "ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச:, அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" என்கிற கீதாச்லோகத்தினால் விசதம்.

ஆக இவ்வளவும் ஸாங்க்யர்களின் பக்ஷத்தை நிராகரித்து ஆத்மாவுக்கே கர்த்ருத்வமுள்ள தென்று ஸாதிக்கப்பட்டது. இனி இந்த கர்த்ருத்வமானது ஸ்வாதீநமா? பராதீநமா? என்கிற சங்கையிலே சொல்லவேண்டியவற்றைச் சொல்லுகிறோம்.

ஆத்மாவின் கர்த்ருத்வம் ஈச்வராதீநம்.

சாஸ்த்ரம் அர்த்தவத்தாக வேண்டியதற்காக கர்த்ருத்வம் ஆத்ம தர்ம மென்று கொள்ளவேணும். அந்த கர்த்தாவுக்கு தர்மமான ஜ்ஞாநம், இச்சை, ப்ரயத்நம் ஆகியவை பகவானுக்கு அதீநங்களாயிருக்கையாலும், பகவானுடைய அநுமதியில்லாமல் அந்த ஜ்ஞாநம் முதலியவை க்ரியா ஹேதுவாக மாட்டாமையாலும் இவனுடைய கர்த்ருத்வம் ஈச்வராதீநமென்று கொள்ளவேணும்.

இங்ஙனே கொண்டால் புண்ய பாபங்கள் ஈச்வரனுக்கேயாக வேண்டாவோ? சேதநனுக்கு ஆக இடமில்லையே! என்கிற சங்கை உதிக்கக்கூடும். "சேதநனுடைய புத்தி மூலமான ப்ரயத்நத்தை யபேக்ஷித்து ஈச்வரன் அநுமதி பண்ணுகையாலே அந்த க்ரியையைப் பற்றி வரும் புண்ய பாபங்களும் சேதநனுக்கேயாகின்றன" என்று நம் பூர்வாசாரியர்கள் ஸமாதானம் அருளிச் செய்கின்றனர். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் "பராத்து தத் ச்ருதே:" என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் பராயத்தமென்று சொல்லப்பட்டிருப்பதும் "க்ருத ப்ரயத்நாபேக்ஷஸ் து விஹித ப்ரதிஷித்தா வையர்த்த்யாதிப்ய:" என்கிற ஸூத்ரத்தினால் சங்கா பரிஹாரம் செய்யப்பட்டிருப்பதும் குறிக் கொள்ளத்தக்கது. விதி நிஷேதங்கள் வீணாகாமைக்காக இச்சேதநன் பண்ணின ப்ரதமப்ரயத்நத்தை யபேக்ஷித்துக் கொண்டு ஈச்வரன் ப்ரவர்த்திப்பிக்குமென்றதாயிற்று.

இதைச் சிறிது விவரிக்கிறோம்; எல்லா சேதநர்க்கும் ஜ்ஞாத்ருத்வம் இயல்பாகை யாலே பொதுவாக ப்ரவ்ருத்தியிலும் நிவ்ருத்தியிலும் உரிமை தடையற்றிருக்கும். இத்தகைய உரிமையை நிர்வஹிக்கைக்காக ஈச்வரன் அந்தராத்மாவாய்க் கொண்டு நிற்பன். அவனாலே யுண்டாக்கப் பட்ட ஸ்வரூப சக்தியை யுடையனான சேதநன் அந்தந்த பதார்த்தங்களிலே ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நங்களை உண்டாக்கிக் கொண்டிருப்பன். அவ்விடத்தில் மத்யஸ்தனாகை யாலே உதாஸீநரைப் போலே யிருக்கிற பரமாத்மாவானவன் அந்த சேதநனுடைய பூர்வ வாஸநாநுரூபமான ப்ரவ்ருத்தி நல்லதோ தீயதோ அதில் அநுமதியையும் அநாதரத்தையு முடையனாய்க் கொண்டு, நல்லது செய்யுமளவில் அநுக்ரஹத்தையும், தீயது செய்யுமளவில் நிக்ரஹத்தையும் பண்ணா நிற்பனாய் ஸுகதுக்கங்களை அவ்வோ சேதநர்களுக்கும் கொடா நிற்பன்.

நடாதூரம்மாள் அருளிச்செய்த தத்வஸார மென்னும் க்ரந்தத்தில்—*ஆதாவீச்வர தத்தயைவ புருஷ: ஸ்வாதந்த்ர்ய சக்த்யா ஸ்வயம் தத்தத்ஜ்ஞான சிகீர்ஷண ப்ரயத்நாங்யுதபாதயந் வர்த்ததே! தத்ரோபேக்ஷ்ய ததேநுமத்ய விததத் தந்நிக்ரஹாநுக்ரஹௌ தத்தத்கர்மபலம் ப்ரயச்சதி ததஸ் ஸர்வஸ்ய பும்ஸோ ஹரி: * என்கிற ச்லோகத்தின் பொருள் இவ்விஷயத்தில் நன்கு தெளிவு பிறப்பிக்கும்.

(இதன் பொருள் வருமாறு—ஸர்வநியாமகனும் ஸர்வாந்தராத்மாவான ஸர்வேச்வரன் ஆதியிலே தனக்கு உண்டாக்கிக் கொடுத்த ஜ்ஞாத்ருத்வ ரூபமான ஸ்வாதந்த்ரிய சக்தியாலே சேதநன் தானே அவ்வோ விஷயங்களிலே ஜ்ஞாந சிகீர்ஷா ப்ரயத்நங்களைப் பண்ணிக் கொண்டிருப்பன். அவ்விடத்தில் அசாஸ்த்ரீயங்களிலே உபேக்ஷித்தும் சாஸ்த்ரீயங்களிலே அநுமதி பண்ணியும் அவ்வோ விஷயங்களிலே நிக்ரஹாநுக்ரஹங்களைப் பண்ணா நின்று கொண்டு அவ்வோ கர்மபலத்தையும் ஸர்வேச்வரன் கொடா நிற்பன் என்கை.

விசேஷ சங்கைக்குப் பரிஹாரம்.

"ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி, ஏஷ ஏவா ஸாது கர்ம காரயதி தம் யமதோ நிநீஷதி" என்று ஓதப்பட்டிருக்கின்றது. இதன் பொருளா வது, எம்பெருமான் எந்த சேதநனை உயர் கதியை யடைவிக்க விரும்புகிறானோ அவனைக் கொண்டு நல்ல காரியங்களைச் செய்விக்கிறான். எந்த சேதநனை நீச கதியை யடைவிக்க விரும்புகிறானோ அவனைக் கொண்டு கெட்ட காரியங்களைச் செய்விக்கிறான்—என்பதாம், ஆகவே நல்ல எண்ணத்தாலும் கெட்ட எண்ணத்தாலும் ஸர்வேச்வரன் தானே ஸாதுவாயும் அஸாதுவாயுமுள்ள கருமங்களைப் பண்ணுவியா நிற்கு மென்கிற விது எங்ஙனே பொருந்தும்? என்று பிரபலமான சங்கை உதிப்பதுண்டு. இதற்குப் பரிஹாரம் ஸ்ரீபாஷ்யகாரர் தாமே நிரூபித்தருளினார். மேலே காட்டின உபநிஷத்தின் விஷயம் ஸர்வஜநஸாதாரணமன்று. யாவனொருவன் பகவத் விஷயத்தில் மிக மிக அதிகமான ஆநுகூல்யத்திலே ஊன்றப் பட்ட வனாய்க் கொண்டு ப்ரவர்த்திக்கின்றானோ, அவனை அநுக்ரஹியா நின்று கொண்டு பகவான் தானே தன்னைப் பெறுதற்கு ஸாதனங்களாயும் அதி கல்யாணங்களாயுமுள்ள கருமங்களிலே ருசியை ஜநிப்பிக்கிறா னென்றும், யாவனொருவன் மிக மிக ப்ராதிகூல்யத்திலே ஊன்றப் பட்ட வனாய்க் கொண்டு ப்ரவர்த்திக்கின்றானோ அவனை ஸ்வப்ராப்தி விரோதிகளாயும் அதோகதி ஸாதனங்களாயுமுள்ள கருமங்களிலே ஸக்தனாக்குகிறானென்றும் அந்த உபநிஷத் வாக்யத் திற்குப் பொருளாம். ஆகவே பொருந்தாமை யொன்றுமில்லை யென்பர்.

ஆனபின்பு சேதந ப்ரவ்ருத்தியில் எம்பெருமானுக்கு அநுமந்த்ருத்வமே ஸர்வஜன ஸாதாரணம், ப்ரயோஜகத்வம் விசேஷ விஷயம் என்று கொள்ளவேணும். (தொடரும்.)

கடிதம்

ராவ்ஸாஹிப். S. ராகவையங்கார்,

ரிடைர்ட் டெப்டி கலெக்டர்.

26, பாஜுல்லாரோட், மாம்பலம்.

இந்த மஹான் எழுதுகிருர்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியால் வெளியிடப்பட்ட ஸத்புருஷ ஸமாராதன மென்னும் க்ரந்தங்கொண்ட மார்ச்சுமாத ஸஞ்சிகையின் ராப்பரில் உள்ள விஷயத்தைக் கண்ணுற்றேன். *பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யென்ற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியின்படி அடியேனும் ஒரு மத்யஸ்தனுக நியமிக்கப் பெற்றிருக்கிறேன். அதற்குரிய யோக்யதையில்லாதவனுயினும், சில காலமாக வெளிவரும் விவாத புத்தகங்களையெல்லாம் பெற்று வாசித்து வருகிறேனுதலால் பக்ஷபாதமின்றி நடுநிலையில் என் மனதில் பட்டதை விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். ஸஜ்ஜநாராத்னம் முதல் பாகம், இரண்டாம் பாகம், அதற்கு பதிலாக எழுதியவைகள் ஆகிய எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்தேன். நல்ல விஷயங்களை நன்கு பரிசீலித்து எழுதுவதே வித்வான்களின் கடமையாகும். தமிழில் போதுமான ஞானமும் எழுதும் பழக்க வழக்கமும் அற்ற நிலைமையில், ஊற்றுக்கு நிற்காத விஷயங்களை யெடுத்துக் கொண்டு, இல்லாத தோஷங்களைக் கல்பிப்பது ஸஜ்ஜநாராதன நூலாசிரியருடைய தன்மையாகக் காண்கிறது. இது சரியன்று. வித்வானுக்கு தோஷஜ்ஞ: (தோஷங்களை யறிபவன்) என்றொரு பெயர் இருந்தாலும், இல்லாத தோஷங்களை இருப்பதாக அறிவதும் அதைப் பிரசுரம் செய்வதும் வீணை ஆக்ரஹத்தின் மேன்மையையே காட்டும்.

*அராவணமராமம் வா * என்கிற ரீதியில் பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் ஊக்கம் கொண்டாடத்தகுந்ததே. "வ்ரஜந்தி தே மூடதிய: பராபவம் பவந்தி மாயாவிஷு யே ந மாயிந:, ப்ரவிச்ய ஹி க்நந்தி சடாஸ் ததாவிதாந் அஸம்வ்ருதாங்காந் நிசிதா இவேஷவ:" என்ற பாரவிவசனமும் ஒக்கும். ஆனல் "விவாஹச் ச விவாதச் ச ஸமயோரேவ சோபதே". ப்ரக்ருதத்தில் ஸ்வாமியின் வியாஸங்களையும் மடத்துப் பண்டிதர்கள் பெயரால் வரும் அஸம்பத்த ப்ரலாபங்களையும் பார்க்கும்போது "யதந்தரம் ஸிம்ஹஸ்ருகாலயோ:" என்று தான் தேறுகிறது. அந்த பண்டிதர்களின் லிகிதங்களில் பிராமாணிகமாக ஒன்றும் தெரியவில்லை. அஸம்பத்த ப்ரலாபங்களும் விதண்டைகளும் பரதூஷணங்களுமே நிரம்பியிருக்கின்றன. முக்கியமான விஷயங்களுக்கு ஸ்வாமி நிஸ்ஸந்தேஹமாய் பதில் கொடுத்தாய் விட்டது. இவற்றைக் கவனித்துப் பார்த்தார்களானல் மறுபடியும் எழுதுவதற்கு ஆஸ்பதமேயில்லை அப்படியிருந்தும் * ந நமேயம் து கஸ்யசித் என்றபடி பிடிவாதமாய் எழுதத் துணிவர்களேயானல் ஹநுமான் பீமனுக்கு "ஸாம்நா தாநேந பேதேந தண்டேந உபேக்ஷணேந ச, ஸாதநீயாநி கார்யாணி ஸமாஸவ்யாஸ யோகத:" என்று சொல்லிய நீதியின்படி கடைசியுபாயமான உபேக்ஷணத்தைப் பற்றுவதுதான் நலம். இது ஸௌகந்திகாஹரண ப்ரகரணத்திலுள்ளது. ஆனல் விஷப்பூண்டை வளரவிடலாமா? என்ற கேள்வி பிறக்கும். ப்ரக்ருதத்தில் இந்த விஷப்பூண்டினல் ஹாநியொன்றும் நேர்படாது. எப்பொழுதாவது எதிர்ப் பண்டிதர்களின் விஷயங்கள் தலையெடுத்து ஸதாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு ஹானியுண்டாகும்போல் தோன்றினல் அப்போது *அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம் இச்சந் ஹரிகணேச்வர* என்றபடி ஸ்வாமிக்கு அவலீலையாகவே அதைக் கண்டிக்கமுடியும் என்பது அடியேனுடைய துணிபு.

மேலும் ப்ராமாணிகமாய் ஒன்றும் எழுதத் தெரியாதவர்களுக்கு ஸ்வாமியுடன் சாஸ்த்ரார்த்தங்களில் வாதப்போர் செய்தோ மென்ற Cheep Volorety (இலவசக்யாதி) ஸம்பாதித்துக் கொடுத்ததாக ஆகும். மேற் கூறிய காரணங்களைக் கொண்டு ப்ரக்ருத பண்டிதர்களுடைய லேகனங்களை உபேக்ஷை செய்வதே நலம்.

S. ராகவையங்கார். 15—4—52,

ஸ்ரீ:

பகவத்விஷய ரஸாநுபவம்

திருமங்கையாழ்வாரும் அஷ்டபுஜத்தானும்.

(பெரிய திருமொழி 2—8 பதிகம்)

அவதாரிகை:—ஸ்ரீராமபிரான் தண்டகாரணியத்தில் எழுந்தருளியிருந்தபோது அங்குள்ள மஹர்ஷிகளெல்லாரும் திரண்டு பெருமாளுடைய பர்ணசாலைக்கு ஓடிவந்து 'ராக்ஷஸர்களாலே நாங்கள் புண்பட்டிருக்கிறபடியைப் பாராய் பிரானே!, இது ஒரு குத்து, இது ஒரு வெட்டு, கண்டருளாய்' என்று சொல்லி அரக்கர் நலிந்த தங்களுடம்பைக் காட்டினபோது பெருமாள் சோதிவாய் திறந்து சொல்லுகிறார்—"[illegible]=ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷாஹி மமாதுலா—யதீத்ருசைரஹம் விப்ரை: உபஸ்தேயைருபஸ்தித:" என்றார்; அதாவது—மஹர்ஷிகாள்! அடியேனை மிகவும் க்ஷமித்தருளவேணும்; இப்போது அடியேனுக்குண்டான வெட்கம் சொலலுந்தரமன்று. உங்களுக்கு ஒருவிதமான நோவும் வாராதபடி நான் நோக்கிக்கொள்ளவேண்டியவன்; என் கடமையை நான் தவிர்ந்து உங்களை நோவுபட விட்டிருந்தேன்; இஃது எனக்குப் பெரிய குற்றம். அதற்குமேல் நானாகவே உங்களாச்ரமத்தில் வந்து 'இப்படி நீங்கள் நோவுபட நேர்ந்ததா? என்று விசாரிப்பதும் செய்யாமல், நீங்கள்பட்ட நோயை நீங்களே என்னிடம் வந்து கதறும்படியாக நான் பிறபட்டேன்; இஃது எனக்கு மிகப்பெரிய குற்றம்; ஆகையாலே இவ்வளவு குற்றவாளியான நான் உங்களைக் காணும்போது மிகவும் வெள்கி நிற்கின்றேன்-என்றார். ரிஷிகள் விஷயத்திலே இப்படி பேசுகிற எம்பெருமான் ஆழ்வார்கள் விஷயத்திலே இதிலும் பதின்மடங்கு அதிகமாகப் பேசுவனன்றே. ஆழ்வார்கட்கும் ரிஷிகட்கும்—பர்வதத்துக்கும் பரமாணுவுக்குமுள்ள வாசி உண்டிறே;

கீழ்த்திருமொழியில், இடவெந்தை யெம்பெருமானை யனுபவிக்குமிடத்து ஆழ்வார் தாமான தன்மையையிழந்து பட்டபாடுகளைத் திருவுள்ளம்பற்றின எம்பெருமான் 'இவ்வாழ்வாரை இப்படியா நாம் துடிக்கவிட்டோம்!; தம் துடிப்பைத் தாமே முறையிட்டுக்கொள்ளும்படியாகவும் நாம் பிறபட்டோமே!' என்று முடிமேல் மோதிக்கொண்டு, அடியார்களுக்குத் தாம் உதவின குணங்களையும் பரம விலக்ஷணமான வடிவழகையும் பிரகாசப்படுத்திக்கொண்டு திருவட்டபுயகரமென்னும் கச்சித்திருப்பதியிலே ஆழ்வார்க்குப் பரமபோக்கியமாக ஸேவை ஸாதித்தான்; ஆழ்வாரும் (கீழ்த்திருமொழியின் அநுபந்தமாகவே) பரகாலநாயகியான நிலைமையிலேயே நின்று அப்பெருமானை ஸேவித்தார்; என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோலமாயிருந்தது; "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்" என்றாற்போலே அப்பெருமானை இன்னானென்று அறியமாட்டிற்றிலர்; அறிந்து கொள்ளாமலிருக்க மனமில்லை; ஸ்வபுத்தியாலே அறிந்துகொள்ளவும் முடியவில்லை; என்ன செய்வது? 'நீர் ஆர்?' என்று கேட்கலாமென்று பார்த்தாலோ, வாய் எழும்பவில்லை. முகத்தை நேரேபார்த்து வார்த்தைசொல்லமுடியாதபடி சோதிவெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது; அதனால், முகம்நோக்கி 'நீர் ஆர்?' என்று கேட்கமாட்டிற்றிலர்; 'இவர் நம்முடைய பர்த்தாவாகவேயிருக்கக்கூடும்' என்று நெஞ்சிலே ஒரு தோற்றமும் தோன்றினமையால் வெட்கத்தாலும் 'நீர் ஆர்?' என்று கேட்கமாட்டிற்றிலர்; கேட்டுத் தெரிந்துகொள்ள விருப்பமோ அதிகரித்துவிட்டது; அவர் தம்மையே நேரே முகம்பார்த்துக் கேளாமல் வேறொருவரை நோக்கி 'இப்பெரியவர் ஆர்கொல்!' என்று கேட்க, அதற்கு எம்பெருமான்றானே

'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூற, படுக்கைத்தலையிலே இப்படி சிலவார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதைப் பரகாலநாயகியின் தாய்மார் தோழிமார் முதலானோர் செவியுற்று 'நங்காய்! ஏதேனும் ப்ரமித்தாயோ? இவை என்ன வார்த்தைகள்?' என்று கேட்க 'ப்ரமித்தேனல்லேன்; ஒரு மஹாபுருஷரை ஸேவிக்கப்பெற்றேன், 'இவரார்கொல்?' என்று கேட்டேன்; திருவட்டப்புயகரத்துநாயனார் 'நான் தான் அட்டபுயகரத்தேன்' என்று உத்தரமருளிச் செய்கிறார்காண்மின்—என்று பரகாலநாயகி தன் தாய்மார்க்கும் தோழிமார்க்கும் நடந்த வரலாறு சொல்லுவதாயிருக்கிறது இத்திருமொழி.

ஆழ்வார் எம்பெருமானை அநுபவிக்கும் விதங்களில் இதுவும் ஒரு ஆச்சரியமான விதமாகுமென்றுணர்க. கீழ்த்திருமொழி—தாய்பாசுரம்; இத்திருமொழி—தலைவி பாசுரம்.

திரிபுர மூன்றெரித்தானும் மற்றைமலர்மிசைமேலயனும் வியப்ப *
முரிதிரை மாகடல்போல்முழங்கி மூவுலகும் முறையால்வணங்க *
எரியனகேசர வாளெயிற்றொடு இரணியனாக மிரண்டுகூறா *
அரியுருவாமிவரார்கொலென்ன அட்டபுயகரத்தே னென்றாரே. (க)

ஒரு பெரியவர்வந்து ஸேவைஸாதித்தார், அப்போதைய நிலைமை இப்படிப்பட்டிருந்ததென்கிறாள் பரகால நாயகி: சிவனும் பிரமனும் கண்டு ஆச்சரியப்படும்படியாகவும், மூவுலகத்திலுள்ளவர்களும் அலையெறிகின்ற கடல்போல் ஸ்தோத்ர கோஷங்களைச் செய்துகொண்டு வணங்கவும், நெருப்புப்போன்ற உளைமயிர்களோடும் வாள்போன்ற கோரப்பற்களோடுங்கூடி, இரணியன் இருபிளவாம்படியாக நரசிங்கவுருக்கொண்டு தோன்றின இம்மஹாநுபாவர் ஆர்? என்று நான்கேட்டேன்; அதற்கு அவர் "நான் அட்டபுயகரத்தேன்—அட்டபுயகரத்தில் வஸிப்பவன்காண்; 'அன்றொருகால் ப்ரஹ்லாதனுக்காகவந்து உதவினமாத்திரமன்று; உனக்கு உதவுகைக்காக இங்கேவந்து ஸமயம்பார்த்து நிற்கிறவனன்றோ நான்' என்றார்—என்கிறாள்.

எதிரேவந்து தோற்றினவருடைய ஸ்வரூபஸ்வபாவங்கள் ஆழ்வார்க்குத் தெரியாதிருந்தால் '**இவரார்கொல்?**' என்று கேட்கலாம்; "**திரிபுர**" மென்று தொடங்கி "**அரியுருவாமிவர்**" என்னுமளவும் மூன்றரையடிகளால் அவனுடைய ஸ்வரூபஸ்வபாவங்களைத் தாம் நன்கறிந்தமையைச் சொல்லிவைத்து '**இவரார்கொல்?**' என்று கேட்பது பொருந்துமோ? எனின்; இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்கிறார்—"அடையாளம் சொல்லா நிற்கச்செய்தே நிச்சயிக்க வொண்ணாதபடியிறே விஷயஸ்வபாவம்!" என்று. "இன்னாரென்றறியேன் அன்னே யாழியொடும்பொன்னார்சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்" என்னுமாபோலேயாம். "அடையாளம் சொல்லாநிற்கச்செய்தே அறியேனென்னப் பண்ணுகிறது அவன் வைலக்ஷண்யம்" என்று அவ்விடத்திலும் வியாக்கியான ஸ்ரீஸூக்தியுள்ளது. அஸாதாரண லக்ஷணங்களைத் தெரிந்துகொண்டபின் இன்னாரென்றறியாமை யென்பதொன்றுண்டோவென்று பலர்க்கும் நெஞ்சில் கலக்கமாகவேயிருக்கும்; ஆழ்வாருடைய நிலைமை வாய்ந்தாலன்றித் தெளிவு பிறவாது; என்செய்வோம்? 'எதிரேவந்து தோன்றுகின்ற இவருடைய லக்ஷணங்களைப்பார்த்தால் இவர் எம்பெருமானாயிருக்கக்கூடும்' என்று நினைக்கலாகிறது; ஆனால், 'தௌர்பாக்கியசாலிகளான நமக்கு அவர் இவ்வளவு ஸுலபமாக ஸேவைஸாதிக்க ப்ராப்தி இருக்கமாட்டாதே' என்று நம்முடைய தன்மையைக்கூடவே நினைத்துக்கொண்டால் 'வேறு யாரேனுமொருவரோ இவர்' என்று ஸந்தேஹிக்க இடமுண்டாகிறது—என்பதாகக்கொள்க. பிராட்டி அசோகவனிகையில் வருந்திக்கிடந்தபோது சிறியதிருவடி வந்து எதிரே கைகூப்பி நின்று மெய்யேவார்த்தை சொல்லச்செய்தேயும் 'இஃது இந்நிலத்தில் ஸம்பாவிதமாகக்கூடியதன்றே' என்று சிந்தித்த பிராட்டி "**கிம் நு ஸ்யாத் சித்தமோஹோயம் பவேத் வாதகதிஸ்த்வியம் |**

𑌉𑌨𑍍𑌮𑌾𑌦𑌜𑍋 𑌵𑌿𑌕𑌾𑌰𑍋 𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌯𑌂 𑌮𑍃𑌗𑌤𑍃𑌷𑍍𑌣𑌿𑌕𑌾=கிம் நு ஸ்யாத் சித்தமோஹோயம் பவேத் வாதகதிஸ்த்வியம் — உந்மாதஜோ விகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா" என்று 'இது மதிமயக்கத்தால் வந்ததோ! காற்றுப்போக்கின் தோற்றரவோ? பித்தவிகாரத் தோற்றமோ? கானல் காட்சியோ?' என்று பலவகையாகச் சங்கிக்கவில்லையா?. நிற்க.

திரிபுரம் மூன்று எரித்தானும்=முற்காலத்தில் தாரகாஸுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம்பெற்று வானத்துப்பறந்து செலலுந்தன்மை வாய்ந்த மூன்று பட்டணங்களை யடைந்து மற்றும்பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்தவிடங்களிற் பறந்து சென்று பலவிடங்களின் மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வருகையில் அத் துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால், சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்த்ரஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில்நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்நியை முனையாக வுடைய அம்பாகவும் அமைத்துக் கொண்டு யுத்தஸந்நத்தனாய்ச் சென்று போர் தொடங்கும் போது சிரித்து அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்—என்பது திரிபுரமூன்றெரித்த வரலாறு.

திரிபுரம்—திரிந்து கொண்டிருந்த பட்டணங்கள் எனப் பொருள்படுதலால் வினைத் தொகை; இனி, '**த்ரிபுரம்**' என்னும் வடசொல் **திரிபுர** மெனத்திரிந்ததாகவுங் கொள்ளலாம். இங்ஙனாகில், "திரிபுரமெரித்தான்" என்னுமளவே போதுமாயிருக்கத் '**திரிபுரமூன்று**' என்றது என்? என்று கேள்விபிறக்கும்; இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செயல்—"**பஞ்ச பஞ்சஜநா:, ஸப்த ஸப்தர்ஷய:**" என்னுமாபோலே தனித்தனியே நாமதேயமாகவுமாம்" என்று.

சிவனும் பிரமனும், தாங்களும் சில அற்புதமான காரியங்களைச் செய்பவர்களாயிருந் தாலும் எம்பெருமானுடைய அரியபெரிய அற்புதச் செயல்களைக் கண்டு, கொக்கு கடலைக் கண்டாற்போலே ஆச்சரியப்படுவர்களென்க.

முரிதிரைமாகடல்=மடிந்து மடிந்து எறிகின்ற அலைகளையுடைய கடல் என்றபடி. **எரியன**='அன்ன' என்னும் குறிப்புப்பெயரெச்சம் '**அன**' என்று தொக்கிக்கிடக்கிறது. **கேசரம்**—'கேஸரம்' என்ற வடசொல் விகாரம்; சிங்கத்தின்பிடரிமயிர்கட்குக் கேஸரமென்று பெயர். (**கேஸரீ**—சிங்கம்.)

"அரியுருவாகிய நீர் ஆர்?" என்று அப்பெரியவரையே முகம்நோக்கிக் கேட்கமுடியாமல் தலைகுனிந்து வேறொருவரை நோக்கிக் கேட்பதுபோல் **இவரார்கொல்?** என்று நான் கேட்டேன், அதற்கு அவர்தாமே '**நான் அட்டபுயகரத்தேன்**' என்று மறுமொழி கூறினர் என்கிறாள் பரகாலநாயகி.

அட்டபுயகரத்தேன்=அட்டபுயகரத்திலுள்ளவன் நான் என்று பொருள். 'அஷ்ட புஜன்' என்பது எம்பெருமானுடைய திருநாமம்; எட்டுத்திருக்கைகளையுடையவன் என்று பொருள். **க்ருஹம்** என்ற வடசொல் கரமெனத்திரியும்; ஆகவே, அஷ்டபுஜனுடைய க்ருஹம்—அட்டபுயகரம்; (திவ்ய தேசத்தைச் சொன்னது.) அவ்விடத்திலுள்ளவன் நான் என்றதாயிற்று. 'நான் அட்டபுயன்' என்றே எம்பெருமான் மறுமொழி கூறியிருக்கலாமே? தலையைச்சுற்றி மூக்கைப் பிடிப்பதுபோல இங்ஙனே ஏதுக்குச் சொன்னான்? என்று கேள்வி பிறக்கும்; கேண்மின்; 'நான் அட்டபுயன்' என்று சொல்லிக் கொண்டால் தன்னை எம்பெருமானாகத் தானே வெளியிட்டதாக விளங்கிவிடும்; அப்படி ஸ்பஷ்டமாகச் சொல்லிக்கொள்ள

எம்பெருமானுக்குத் திருவுள்ளமில்லை; வேற்றுமனிதனைப் பொய்சொல்லிக்கொள்ளவும் விருப்பமில்லை; ஆகவே, வெகு சாதுர்யமாகச் சொல்லிக்கொள்ளுகிறான் **அட்டபுயகரத்தேன்** என்று. 'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திற்கு நான் அதிபதி' என்றதாகவுமாம், 'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திலே கிடப்பாரொருவன் நான்' என்று ஸாமான்யமாகச் சொல்லிக்கொண்டதாகவுமாம்.

துஷ்யந்தமஹாராஜன் வேட்டையாடிக்கொண்டே சகுந்தலையின் இருப்பிடத்தை அடைந்தபோது இவனின்னானென்று தெரிந்துகொள்ள விரும்பி 'நீயார்?' என்று கேட்டார்க்கு அரசன் விடைகூறும்போது "ஹவதி ய: பௌரவேண ராஜ்ஞா யஜ்ஞரக்ஷாயிகாரே நியுக்த: ஸோऽஹம்" [புரு வம்சத்து அரசனாலே தருமகாரியங்களைச் செய்யுமாறு நியமிக்கப்பட்டவன் நான்] என்று சாதுரியமாக விடைகூறினது இங்கு நினைக்கத்தக்கது. புரு வம்சத்து அரசனாகிய தன் தந்தையினால் நியமிக்கப்பட்ட அரசன் தான் என்றும், புருவம்சத்து ராஜாவுக்கு வேலைக்காரன் தான் என்றும் இருவகையாகப் பொருள்படுமாறு உரைத்தது காண்க.

"அட்டபுயவகரம்" என்பது அட்டபுயகரம் என மருவிற்றென்றலும் பொருந்தும்; அகரமாவது அக்ரஹாரம். .... (1)

ஸ்ரீஸ்வாமியின் அறுபத்தோராவது திருநக்ஷத்ர மஹோத்ஸவ விசேஷம்.

(நல்லப்பா ஜீயப்பங்கார், சின்ன காஞ்சி.)

ஏற்கெனவே பிரசுரம் செய்திருந்தபடி ஸ்ரீ காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமியின் அறுபத்தோராமாண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம் ஸ்ரீ ஸ்வாமி திருமாளிகையில் இருபத்தேழுநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பங்குனி மாதத்தில் திருவிசாக நக்ஷத்திரம் இரண்டு வந்தபடியால் முதல் விசாகத்தில் தொடங்கி இரண்டாவது விசாகம் வரையில் இம்மகோத்ஸவக் கொண்டாட்டம் பரமவைதிகமான தோரணையில் நடைபெற்றது. ஷடி இருபத்தேழு நாட்களிலும் பின் மாலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையிலும் யஜுர்வேதம் க்ரமாந்த பாராயணம் செய்து முடிக்கப்பட்டது. பின் மாலையிலும் இரவிலும் திருவீதி ப்ரதக்ஷிணம் மஹோத்ஸவம்போல் நடைபெற்று வந்தது. இதுதவிர, ஆரம்பதினம் முதல் 11-நாள் வரையில் ஸாமவேத பாராயணம் அகண்டமாக நடந்து முடிந்தது. அது முடிந்ததும் சுக்லயஜுர்வேத பாராயணம் ஐந்து நாள் நடந்து முடிந்தது. ஸ்வாமியின் சிஷ்யர்களாக சென்னையிலுள்ளவர்கள் மூன்று நாள் வந்திருந்து ஸஹஸ்ரநாம பாராயண ஸ்த்தோத்ரபாட கோஷ்டிகளைத் திருவீதிகளில் நடத்தி தங்களுடைய பக்தி ஸேவையைக் காட்டிக் களித்தார்கள்.

திருநக்ஷத்ர தினத்திற்குப் பத்துநாள் முன் திவ்யப்ரபந்த ஸேவை கோஷ்டி பெரிய திருவோலக்கமாக நடந்தது. சென்ற வருஷம்போலவே ஸ்தோத்ரபாட கோஷ்டியும் ரஹஸ்யாநுஸந்தான கோஷ்டியும் தனிச்சிறப்பாக நடந்த விஷயம் குறிப்பிடத்தக்கது. ரேஷன் சிரமத்தினால் ததீயாராதனை நடத்த இயலாதென்று தெரிவித்திருந்தாலும், பல அன்பர்கள் முன்னின்றதனால் அக்குறை சிறிதுமில்லாதபடி இருபத்தேழு நாளும் கைங்கரியத்தில் அந்வயித்திருந்த ஸ்வாமிகளுக்கு நம்பிள்ளை ஸன்னிதியிலும் ஸ்வாமி திருமாளிகையிலும் ததீயாராதனை சிறப்பாக நடந்தேறிற்று. ஸம்பாவனைகளும் சென்ற வருஷம்போலவே நூற்றுக்கணக்கான ஸ்வாமிகளுக்கு நடைபெற்று 12—4—52ல் திருவிசாகத்தன்று மஹோத்ஸவம் இனிது முடிவுபெற்றது.

வைதிக வித்யைகளில் பரிச்ரமப்பட்டுச் சிறந்த யோக்யதை பெற்றவர்களை ஆதரிப்பதே ஸ்வாமியின் முக்கியமான உத்தேச்யமாதலால் இந்த மஹோத்ஸவக் கொண்டாட்ட வியாஜத்தினால் அனேகம் வைதிக ஸத்புருஷர்களை ஸத்கரித்தது பற்றி யாவரும் மகிழ்ந்தார்கள். இப்படி அடிக்கடி நடத்திக்களிக்க ஸ்வாமி குதூஹலம் கொண்டிருப்பதைப்பற்றி அடியேன் போல்வாருடைய ஆனந்தம் அளவிட முடியாதது. பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவருளால் வைதிகஸ்ரீ தழைத்தோங்கவேணும்.

ஸ்ரீமத்ஸுந்தரபரிபூர்ணப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶதாபிஷேக மஹோத்ஸவ வைபவம்.

திருக்குறுங்குடியில் ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் மடத்தில் 46-வது பட்டத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஶடகோப ராமாநுஜ ஜீயர்ஸ்வாமிகளுக்கு நேற்று கர௵ பங்குனி௴ 28, 29, 30௳களில் நடந்த ஶதாபிஷேக மஹோத்ஸவ வைபவம் சுருக்கமாக இங்கு எழுதப்படுகிறது.

திவ்யதேஶஶ்ரேஷ்டமான திருக்குறுங்குடியில் எம்பெருமானார் காலத்தில் அவரால் நியமிக்கப்பட்டு திவ்ய ஆசார்யஸிம்ஹாஸநத்தில் அமர்ந்து அழகியநம்பி திருவாராதநம் முதலிய ஸ்ரீகார்யநிர்வாஹம் ஶிஷ்யஜநஸம்ரக்ஷணம் உபயவேதாந்தப்ரவர்த்தநம் ஸ்ரீவைஷ்ணவநித்ய ததீயாராதநம் இவைகளை செவ்வனே நடத்தி வருகிற ஸ்ரீ பேரருளாள ராமாநுஜஜீயர் ஸ்வாமிமடத்து வம்ஶபரம்பரையில் 46-வது பட்டத்தில் ஆஸநத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஶடகோப ராமாநுஜஜீயர் ஸ்வாமிகளுக்கு சென்ற கர௵ பங்குனி௴ 30௳ திருவிசாக நன்னாளில் 84-வது திருநக்ஷத்திரம் பூர்த்தியடைந்து ஸௌபாக்யமாக ஶதாபிஷேக மஹோத்ஸவம் நேர்ந்தபடியால் ௸ மடத்து சிஷ்யர்களும் அந்தரங்காபிமானிகளும் ஒன்றுசேர்ந்து ௸ மஹோத்ஸவத்தை மிகவும் ஆஸ்தையுடன் உபயவேதபாராயணாதி வைபவங்களுடன் மூன்றுநாள் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

தற்போது ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஶடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் சமதமாத்யாத்மகுணமஹோததி, ஸர்வபூதஸுஹ்ருத், ஆச்ரித ஜநவாத்ஸல்யகுண பரிபூர்ணர், நித்யததீயாராதன க்ரந்த காலக்ஷேபங்களை அவிச்சிந்நமாக நடத்திவருபவர். பகவத்பக்தியே வடிவெடுத்தவர். நம்பியெம்பெருமானுடைய நித்யோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகளை மிகவும் சிறப்புடன் நடத்தி ஸ்ரீகார்யநிர்வஹணம் செய்துவருமழகு வாசாமகோசரம். பலசொல்லியென்?* ரூபமேவாஸ்யைதந்மஹிமாநம் வ்யாசஷ்டே என்கிறரீதியிலே இந்த ஸ்வாமியின் திருமேனியை ஸேவித்த உடனேயே ஸகலாத்ம குணஸம்பத்தியும் வடிவிலே தொடைகொள்ளலாம்படியமையப்பெற்ற மஹாநுபாவர். இந்த ஸ்வாமியின் பெருமை அறியுமுலகெல்லாம் யானேயுமல்லேன். ஔதார்யமோ ஒப்புயர்வற்றது. ௸ ஸமாராதனங்களில் ஈடுபட்ட ஆஶ்ரிதர்கள் ஸௌபாக்யமாகவெண்ணி மூன்று நாள்களில் நடத்தின வைபவம் இங்கெழுதப்படுகிறது.

பங்குனி௴ 28௳ வியாழக்கிழமை காலையில் ஸ்ரீமடத்தில் நின்றும் ஸ்ரீ ஸ்வாமி ஸகல ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்துடன் ஸகல விருதுகள் நாநாவித வாத்ய கோஷங்களுடனும் நம்பி ஸன்னிதிக்கெழுந்தருளி நம்பியை மங்களாசாஸனம் செய்தருளி நம்பியால் திருமாலை திருப்பரிவட்டம் தீர்த்தம் ஸ்ரீசடகோபன் முதலான ஸம்மாநங்கள் ப்ரஸாதிக்கப்பெற்று நம்பி அனுமதிபெற்று ப்ரதக்ஷிணமாய் ஸேவாக்ரமத்தில் மற்ற ஸந்நிதிகளிலும் மங்களாஶாஸநம் செய்து மடத்திற்கெழுந்தருளி யஜுர்வேதபாராயணம் இதிஹாஸபுராணம் ஸ்ரீபாஷ்யம் ஸ்தோத்ரபாடம் ரஹஸ்யங்கள் அருளிச்செயல் ஸேவாகாலம் தொடங்கி அந்த அந்த பாராயணங்களுக்கு யோக்யதையுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களை வெவ்வேறாக விபாகம் செய்து ஸகல பாராயணங்களும் ஒருங்கே அவிச்சிந்நமாய் நடந்து ததீயாராதநகாலத்தில் மட்டும் விஶ்ராந்தியடைந்து ததீயாராதநம் மிக்க விபவத்துடன் நடந்தபின் மறுபடி மாலை 3 மணிக்கு பாராயணங்கள் ஆரம்பிக்கப்பட்டு ராத்திரி 10 மணிவரை நடந்தது.

29ஆ வெள்ளிக்கிழமையன்றும் உபயவேதபாராயணமும் ஸ்ரீபாஷ்யரஹஸ்ய க்ரந்த ஸ்தோத்ரஜாலாதி பாராயணங்களும் ததீயாராதநமும் முதல்நாள் போலவே நடந்தது. இத்துடன் நம்பி ஸன்னிதியில் உபய நாச்சிமார் தனிக்கோவில் நாச்சிமார்களுடன் நம்பிக்குத் திருமஞ்சனம் சிறப்பாக நடந்து திருவாராதநம் கண்டருளி அதிமநோஹரமான அக்கார வடிசில் தளிகை நிவேதநம் நடந்து கோஷ்டி இனிது நடைபெற்றது. ஆரம்பதினம் முதலே ஸன்னிதிமண்டபங்கள் பிராகாரங்கள் ஸ்ரீமடம் முதலிய எல்லாவிடங்களிலும் எலெக்ட்ரிக் விளக்குகள் அஸங்க்யேயமாய் ஏற்றப்பட்டு கோடிஸூர்யப்ரகாசமாய் விளங்கிற்று. அன்று காலை பாராயண ஆரம்பத்திற்கு முன் ஸன்னிதி அர்ச்சகர் பரிசாரகர் ஸ்தானீகம் முதலான ஸகல கைங்கரியபரர்களுக்கும் ஸ்ரீமடத்து கைங்கரியபரர்கள் அனைவோர்க்கும் உபயவேதாதிபாராயணங்களில் அந்வயித்த ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ப்ராசஸ்த்யமான திருப்பரிவட்டங்கள் ஸ்ரீஸ்வாமி திருக்கையால் ப்ரஸாதிக்கப்பட்டு ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் சாத்திக்கொண்டு கோஷ்டியை அலங்கரித்தார்கள். இரவு 8-மணிக்கு உபயநாச்சிமார்களுடன் நம்பியெம்பெருமானுக்கு நாநாவித வாத்யகோஷாதிஸம்ப்ரமங்களுடன் சிறப்பான புறப்பாடு நடத்தப்பட்டு கோஷ்டியும் இனிது நிறைவேறியது.

30ஆ சனிக்கிழமை திருவிசாகத் திருநக்ஷத்திர நன்னாளில் காலையில் வழக்கம்போல் பாராயணங்கள் நடந்து ஸ்ரீஸ்வாமி நம்பிஸன்னிதிக்கு ஸகல பிருது வாத்யகோஷங்களுடன் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளும் ஸமயத்தில் அழகியநம்பிக்கும் உபயநாச்சிமார்களுக்கும் விலையுயர்ந்த அதிப்ராசஸ்த்யங்களான திருப்பீதாம்பரப்பட்டு பட்டுச்சேலைகள் திவ்ய மாலைகள் முதலானதுகளை ஸமர்ப்பித்து நம்பியும் திருவுள்ளமுகந்து சாத்திக்கொண்டபின் திருமாலை திருப்பரிவட்டம் தீர்த்தம் ஸ்ரீசடகோபன் முதலான ஸகல வரிசைகளும் ப்ரஸாதிக்கப்பெற்று ஸ்வீகரித்தருளி ஸகல ஸம்ப்ரமங்களுடன் ஸௌபாக்யத்தில் மங்கலாசாஸநம் செய்தருளி ஸ்ரீமடமே எழுந்தருளி நவதிருப்பதி எம்பெருமான்களின் பிரஸாதங்களையும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் திருமாலை முதலிய ப்ரஸாதங்களையும் பஹுமாநமாக சிறப்புடன் பெற்று உபயவேதபாராயணங்களின் சாத்துமுறையும் யதாக்ரமமாய் நடந்து கோஷ்டி இனிதாக முடிந்தது.

ஸர்வாத்ம ஸாதாரண நாதகோஷ்டீ பூரேபி துஷ்பூரமஹாவகாசம். என்று சொல்லலாம்படியான வைபவத்தையுடைய ஸ்ரீகைசிக மண்டபத்தில் லட்டுமாஷாபூபாதி விவித திருப்பணியாரங்களுடனும் அபூர்வநாநாவித சாகங்களுடனும் ஹாஜாஜாதித்யமென்றே சொல்லலாம்படியான முறையிலே ஸஹஸ்ராயிக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு திவ்ய ததீயாராதநம் அதிவைபவத்துடன் நபூதோநபவிஷ்யதி. என்று சொல்லும்படி நடந்தது. அதன்பின் ஸ்ரீஸ்வாமி நம்பி ஸன்னிதி த்வஜஸ்தம்பஸமீபத்தில் கிளிமண்டபத்திற்கு முன்பாக எழுந்தருளியிருந்து ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நாரிகேளஸஹிதமாக சாத்துப்படி அடைக்காய் ஸுவர்ணதக்ஷிணை உபயவேதபாராயண ஸம்பாவனைகள் முதலியது நடந்து கோஷ்டி இனிது முடிந்தது. ராத்ரி நாநாதேசாநீதப்ரஸித்தவிவிதவாத்யங்கள் ஸகலபிருதுகள் மதிமுகமடந்தையர் நர்த்தனம் வீணாகானம் பாணவேடிக்கை வேதபாராயணம் முதலான பஹுவித ஸம்ப்ரமங்களுடன் ஸ்ரீஸ்வாமிக்கு திவ்ய தண்டிகையில் திருவீதிப்புறப்பாடு மாடவீதி பெரியவீதி பூராவும் வெகு விமரிசையாக நடைபெற்று திவ்யாப்ஸரஸ்ஸுக்களின் ஆலத்திமுதலான மங்களாசாசனத்துடன் ஸ்ரீமடத்திற்கெழுந்தருளினபின் ஸ்ரீமடத்து ஆஸ்தான வித்வான் ஸ்ரீவில்லிபுத்தூர் உ. வே. விஞ்சிமூர் ஆழ்வாரையங்கார் ஸ்ரீஸ்வாமி விஷயமாக தாம் வாசிகவ்ருத்தியாகச் செய்த சதாபிஷேக நவரத்நமாலிகையை ஸ்ரீமடத்தில் கோஷ்டியில் வாசித்து உபந்யஸித்தார். ஷை மடத்து மற்றொரு வித்வான் ப்ரஹ்மஸ்ரீ சங்கரநாராயண சாஸ்திரிகளும் தாம் செய்த ரத்நமாலிகையை வாசித்து உபந்யஸித்தார். இவ்விதமாக ஸ்ரீஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

வித்வான் விஞ்சிமூர் ஆழ்வாரையங்கார் விண்ணப்பித்த

[illegible]

[illegible]

[illegible]

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

11. [illegible]

12. [illegible]

13. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ப்ரஹ்மஸ்ரீ சங்கரநாராயண சாஸ்த்ரிகளின் பத்யமாலிகை.

[illegible]

1. [illegible]
[illegible]
2. [illegible]
[illegible]
3. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
4. [illegible]
[illegible]
5. [illegible]
[illegible]
6. [illegible]
[illegible]
7. [illegible]
[illegible]
8. [illegible]
[illegible]
9. [illegible]
[illegible]
10. [illegible]
[illegible]
11. [illegible]
[illegible]
12. [illegible]
[illegible]
13. [illegible]
[illegible]

[illegible]

இங்ஙனம்

ஸ்ரீமத் திருக்குறுங்குடி ஸ்ரீ பேருளாள ராமானுஜ ஜீயர் மடம் ஸ்ரீ கார்யம்

கிருஷ்ணையங்கார்.